தஞ்சை மன்னர் சரபோஜி அரசு கல்லூரியில்

# கொரோனா தடுப்பூசி முகாம்

தமிழகத்தில் கொரோனா தொற்றை முழுவதுமாக கட்டுப்படுத்தும் நோக்கத்தில் அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது. அதன்படி ஆங்காங்கே சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இந்தவகையில் தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசு கல்லூரியில் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இம்முகாமைக் கல்லூரியின் இந்திய ரெட் கிராஸ் சொரைட்டியும், கல்லூரியின் உள் தர உத்திரவாத அமைப்பும் (IQAC) இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 200 நபர்கள் பயன் அடைந்தனர். இந்த நிகழ்வை கல்லூரி முதல்வர் முனைவர் V.செந்தமிழ் செல்வி தொடங்கிவைத்தார். இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி தஞ்சை கிளையின் பொருளாளர் திரு முத்துகுமார், இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் தஞ்சை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் c. முருகானந்தம், கல்லூரியின் IQAC ஒருங்கிணைப்பாளர் முனைவர் எல். இராஜேஷ், தமிழ்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் P.ராஜமாணிக்கம் ஆகியோர் முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.







